අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# கிறிஸ்தவம்

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்

**கல்வி அமைச்சு**

| 15 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| | |
|---|---|
| கிறிஸ்தவம் - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |

**கிறிஸ்தவம் - I**

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

**பகுதி 1**

1. இயேசு பிறந்த தாவீதின் ஊர்.
   (1)சமாரியா (2)பெத்லகேம் (3)நாசரேத்து (4)கப்பர்நகூம்

2. திருமுழுக்கு யோவான் தன்சீடருக்கு இயேசுவை அறிமுகம் செய்த விதம்
   (1) கடவுளின் மெசியா
   (2) உன்னத கடவுளின் மகன்
   (3)உலகத்தின் பாவம் போக்கும் ஆட்டுக்குட்டி
   (4)உடன்படிக்கையின் தூதர் இதோ வருகிறார்

3. இறைசெய்தியை நம்ப மறுத்தமையால் செகரியாவுக்கு ஏற்பட்ட விளைவு
   (1)பேச்சாற்றலை இழத்தல் (2)தூபம் காட்டும்பணி தடைப்படல்
   (3)மக்கள் கேலி செய்தமை (4)எலிசபெத் முரண்படுதல்

4. யூதர்கள் கடவுளுடன் நித்தியமாக இணைக்கப்பட்டவர்கள் என்னும் அடையாளத்தை வெளிப்படுத்தும் சம்பிரதாயம்
   (1)பெயர் சூட்டுதல் (2)தலைமகன் அர்ப்பணம்
   (3)தலைமகன் மீட்டல் (4)விருத்த சேதனம்

5. மனித வாழ்வை குறித்த இறுதி தீர்மானத்தை எடுப்பவர்
   (1)அலகை (2)இயேசு (3)திருமுழுக்குயோவான் (4)பேதுரு

6. இறையரசும் மெசியாவும் தமக்குரியவர்கள் என்று கருதியவர்கள்
   (1)எகிப்தியர் (2)பபிலோனியர் (3)யூதர் (4)கிரேக்கர்

7. "அஞ்சாதே இன்று முதல் நீ மனிதரை பிடிப்பவர் ஆவாய்"என இயேசுவால் பணிக்கு அழைக்கப்பட்ட சீடன்
   (1)பேதுரு (2)யாக்கோபு (3)யோவான் (4)அந்திரேயா

8. நற்செய்தி பயணங்களின் விளைவுகள்
A-பல இடங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது
B-கடவுளின் பெயரால் பேய்கள் விரட்டப்பட்டன
C-கடவுளின் பெயரால் மந்திரவித்தைகள் செய்யப்பட்டன
D-சென்ற இடங்களில் வரி வசூலித்தனர்

(1)A,C (2)B,C (3)C,D (4)A,B

9. இழந்து போனதை தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார் என இயேசு யாருடைய வீட்டில் கூறினார்
(1)சீமோன் (2)பேதுரு (3)சகேயு (4)லாசரு

10. "………. கடஞுக்கு உரியவற்றை கடவுளுக்கு கொடுங்கள்" என இயேசு கூறியதிலிருந்து வெளிப்படும் செய்தி
(1)உலக அரசக்கு செய்ய வேண்டியதை செய்தல்
(2)எமது முழு வாழ்விலும் அவருக்கு பணி புரிதல் வேண்டும்
(3)முழுவாழ்வையும் எமது குடும்பத்தாருக்காக அர்ப்பணித்தல்
(4)பத்திலொரு பங்கை மட்டும் தசமபாகம் கொடுத்தால் போதும்

11. நற்கருணை விருந்தில் அப்பத்தை பிட்டு உட்கொள்ளுதல், ஒரே கிண்ணத்தில் அருந்துதலின் அடையாளமாக வெளிப்படுவது
(1)ஒற்றுமை (2)ஒப்புரவு (3)சகோதரத்துவம் (4)இணக்கப்பாடு

12. இயேசு கைது செய்யப்படுவதற்கு முன் தனது சீடர்களுக்கு கொடுத்த இறுதி வேண்டுகோள்
(1)தேவைக்கேற்ப இறை வேண்டுதல் செய்யுங்கள்
(2)நித்திரைக்கு முன்னர் இறை வேண்டல் செய்யுங்கள்
(3)தொடர்ச்சியாக விழித்திருந்து செபியுங்கள்
(4)சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்

13. இயேசு குற்றமற்றவர் என நிரூபிப்பதற்கு பிலாத்து எத்தனை தடவைகள் வாதாடினார்
(1)மூன்று (2)நான்கு (3)ஐந்து (4)ஆறு

14. பின்வரும் கூற்றுக்களை கவனத்தில் கொள்க
A-"நீர் கடவுளின் மெசியா"
B-"நீ யூதர்களின் அரசனானால் உன்னை காப்பாற்றிக்கொள்"
C-"ஆண்டவரே உம்மோடு சிறையிடப்படுவதற்கும் ஏன் சாவதற்கும் நான் ஆயத்தமாய் உள்ளேன்"
D-"பிதாவே உமது கரங்களில் எனது ஆவியை ஒப்புவிக்கிறேன்"

பேதுருவுடன் தொடர்புடைய வார்த்தைகள்
(1)A,B (2)B,C (3)A,C (4)B,D

15. இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அவர்களுக்கு கொடுத்த சந்தர்ப்பத்தில் உயிர்த்த இயேசுவை இனங்கண்டவர்கள்
(1)பேதுருவும், யோவானும் (2)கிளேயோப்பாவும், மற்றொரு சீடனும்
(3)தோமாவும், யூதாவும் (4)பேதுருவும், அந்திரேயாவும்

16. திருமுழுக்கு யோவானிடம் இயேசு திருமுழுக்கு பெற்றதன் மூலம் வெளிப்படும் குணாதிசயம்
(1)வெற்றி (2)பெருமை (3)தாழ்மை (4)திறமை

17. இறையரசின் பிரசைகளான நாம் இன,மத பேதமில்லாமல் தேவையில் உள்ளவர்களுக்கு எப்போதும் உதவி செய்ய வேண்டும் என்பதை இயேசுவால் எடுத்துக்காட்டப்பட்ட உவமை

(1)பத்து வெள்ளிக்காசு (2)காணாமற்போன மகன்
(3)பெருவிருந்து (4)நல்ல சமாரியன்

18. எல்லா உலகப்பிரகாரமான காரியங்களுக்கும் காண்பிக்கின்ற மாறுத்தரங்களைப் பார்க்கிலும் இறையரசின் அழைப்பிற்கு மேன்மையான மாறுத்தரத்தை யாருக்கு காண்பிக்க வேண்டும்

(1)குடும்பம் (2)இயேசு (3)உறவினர் (4)நண்பர்

19. இயேசு மீண்டும் வரும்வரைக்கும் இறையரசின் பணிக்கு அர்ப்பணித்தவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது

A-உலக ஆசையை தியாகம் செய்தல்
B-இறைவார்த்தைக்கு இணங்கி செயற்படுதல்
C-அவருடைய தாசர்களுக்கு சுகபோக வாழ்க்கையை ஏற்படுத்தல்
D-எமது விருப்பத்திற்கு ஏற்ப பணியாற்றுதல்

(1)A,B (2)A,C (3)B,C (4)B,D

20. இயேசு கூறியபடி”ஆழமாக நிலத்தை தோண்டி அத்திவாரம் போடுவதாகும்”எனும் கருத்து யாருக்கு ஒப்பிடப்படுகிறது

(1) உலக காரியங்களில் சார்ந்திருப்பவர்
(2)தேவைக்கேற்ப கடவுளை நாடுபவர்
(3)வாழ்வில் ஏற்படும் துன்பங்களால் கடவுளை கைவிடுபவுர்
(4)இறை வார்த்தையை கேட்டு அதன்படி செயற்படுபவர்

21. மனிதனுக்கும் இறைவனுக்குமிடையிலான உறவினை வெளிப்படுத்தும் கட்டளைகள்

A-என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தலாகாது.
B-உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.
C-ஓய்வு நாளை தூயதாக கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு
D-பிறருக்குரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே.

(1)A,B (2)B,C (3)A,C (4)C,D

22. மெசியாவை துன்புறும் ஊழியராக எதிர்வுகூறிய இறைவாக்கினர்

(1)எசாயா (2)எரேமியா (3)எசேக்கியேல் (4)மீக்கா

23. பவுல் “அன்பு வழிகள்” தொடர்பாக எழுதிய திருமுகம்

(1)எபேசியர் (2)கலாத்தியர் (3)தெசலோனிக்கேயர் (4)கொரிந்தியர்

24. “நீ செய்த தவறுக்கு நான் மன்னிப்பு வழங்குகிறேன்”எனக்கூறி துருக்கி இன அலிஅக்கார் என்பவருக்கு மன்னிப்பு வழங்கியவர்

(1)அருட்பணி.பீற்றர் ஜெராட் டீ சில்வா
(2)திருத்தந்தை இரண்டாம் யுவாம் பவுல்
(3)அருட்தந்தை.திஸ்ஸபாலசூரிய
(4)அருட்தந்தை.சந்திரா பர்ணாந்து

25. இஸ்ரயேல் மக்களை கடவுளின் துணையுடன் பாலைநிலத்தில் வழிநடத்திய தலைவர்

(1)பார்வோன் (2)கிதியோன் (3)சிம்சோன் (4)மோசே

26. பேதுரு யோப்பாவில் தோல் பதனிடும் சீமோனின் வீட்டில் தங்கியிருந்து கண்ட தரிசனத்தின் மூலம் கற்றுக்கொள்ளும் விடயம் அல்லாதது
(1)கடவுளின் குரலுக்கு பதிலளிக்க வேண்டும்
(2)எவருக்கும் தராதரம் பார்க்க கூடாது
(3)கடவுளின் நீதிக்கு மேலாக மனித நீதிக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
(4)கடவுளுக்கு அனுதினமும் கீழ்ப்படிய வேண்டும்

27. கிறிஸ்தவ சபையின் முதலாவது மறைசாட்சியாக மரணித்தவர்
(1)ஸ்தேவான் (2)யாக்கோபு (3)பேதுரு (4)பவுல்

28. பவுலின் இரண்டாம் தூதுரை பயணத்தில்"அறியாத தெய்வத்திற்கு"என்ற பலிபீடம் காணப்பட்ட இடம்
(1)கொரிந்து (2)எதென்ஸ் (3)எபேசு (4)பிலிப்பி

29. எமது வாழ்வில் ஆபத்துக்கள் ஏற்படும் வேளைகளில் நாம் செயற்பட வேண்டியமுறை
(1)பயம்கொள்ளுதல் (2)தைரியத்தை இழத்தல்
(3)தன்னம்பிக்கை இழத்தல் (4)இறைவனில் நம்பிக்கை வைத்தல்

30. இனங்களுக்கிடையே காணப்படும் பகைமையை இயேசுவின் அன்பால் அகற்ற முடியும் என்பதை எடுத்துக்காட்டும் சம்பவம்
(1)விதவைப்பெண்ணின் காணிக்கையை மெச்சுதல்
(2)இயேசு சமாரியப்பெண்ணிடம் தண்ணீர் கேட்டல்
(3)மரியாளின் நல்ல பங்கை பாராட்டுதல்
(4)பாவிப்பெண்ணுக்கு மன்னிப்பளித்தல்

31. சமூகத்தில் கிறிஸ்துவை பின்பற்றி வாழும் ஒருவர் செயற்படவேண்டிய முறை
(1) பிறரை குறை சொல்லுதல் (2)கலகம் செய்தல்
(3)ஒழுக்கம் உள்ளவராக இருத்தல் (4)தராதரம் பார்த்தல்

32. இந்தியாவின் வீதியோரங்களில் வாழ்ந்த சிறுவர்களின் வாழ்வில் ஒளியூட்டியவர்
(1)டொக்டர் அம்பேத்கார் (2)புனித தெரேசா
(3)மகாத்மாகாந்தி (4)இந்திராகாந்தி

33. "பாம்பு போலக்கடிக்கும், விரியனை போலத்தீண்டும்"என நீதிமொழிகளில் எதைப்பற்றி கூறுகிறது
(1)சூதாட்டத்தினால் ஏற்படும் விளைவு
(2)பரத்தமையினால் ஏற்படும் விளைவு
(3)பொறாமையினால் ஏற்படும் பாதிப்பு
(4) மதுபானத்தினால் ஏற்படும் பாதிப்பு

34. கிறிஸ்துவை பின்பற்றுபவர்கள் நிலை வாழ்வை உரிமையாக்கி கொள்வதற்கு செய்யவேண்டியது
(1)விண்ணக சொத்துக்களை மட்டும் மனதில் கொள்ளுதல்
(2)உலக சொத்துக்களை சேர்ப்பதில் நாட்டம் கொள்ளல்
(3)தன்னிடமுள்ள சொத்துக்களை பகிர்ந்தளித்தமை
(4)சுகபோகங்களை உச்சமாக அனுபவித்தல்

35. எகிப்திய ஆட்சியாளர் இஸ்ரயேல் மக்களை அடிமைப்படுததியமைக்கான காரணமாய் அமைவது

(1)உயர்ந்த கல்வியறிவு உடையவராய் இருத்தல்

(2)செல்வந்தராய் இருத்தல்

(3)எண்ணிக்கையில் அதிகரித்து காணப்பட்டமை

(4)ஒரே கடவுளை வழிபட்டமை

36. இஸ்ரயேல் மக்களின் நியாயத்தீர்ப்பு தொடர்பாக இறைவன் ஆமோஸ் இறைவாக்கினருக்கு வெளிப்படுத்திய காட்சி

(1)பொங்கி வழியும் பானை

(2)தூக்கு நூல்குண்டு

(3)எரியும் முட்செடி

(4)உலர்ந்த எலும்புகள்

37. தாவீது அரசன் கடவுள் தொடர்ந்து தம்மோடு இல்லை என்பதை எப்போது உணர்ந்து கொண்டார்

(1)மீகாளை மனைவியாக ஏற்காகாமை

(2)சாலமோனை அரசனாக நியமித்தல்

(3)எபூசியரை அழித்தமை

(4)பத்சேபா தொடர்பான பாவம்

38. “தங்கள் வாள்களை கலப்பை கொழுக்களாகவும், ஈட்டிகளை கருக்கரிவாள்களாகவும் அடித்துக்கொள்வார்கள்” என மீக்கா இறைவாக்கினர் எதனை அடையாளப்படுத்தினார்

(1)யுத்தம் (2)சமாதானம் (3)அடிமைத்தனம் (4) பகை

39. திருச்சபையில் பிற இனத்தவர்களை தூய ஆவியின் வல்லமையை அனுபவித்த முதலாவது நிகழ்வு

(1)கொர்னேலியு வீட்டார் (2)லிதியாள் வீட்டார்

(3)எத்தியோப்பிய அண்ணகன் (4)தபித்தாள்

40. கிறிஸ்தவன் என்ற ரீதியில் நாம் துன்பங்களுக்கு முகம்கொடுக்கும் போது எமது பிரதிசெயலாக இருக்கவேண்டியது

(1)இந்நிலையை மாற்றுவதற்கு முடியுமானவற்றை செய்தல்

(2)எமக்கு உதவுபவர்களுடன் நல்லுறவு பேணுதல்

(3)இறைசித்தமாகட்டும் எனக்கூறி செபித்தல்

(4)எமது சொந்த பலத்தின் மூலம் தாங்கிகொள்ளுதல்

புள்ளிகள் (1 x 40=40)

## பகுதி II

முதலாம் வினாவிற்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

*1.*

*(1)* "இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன் அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்…."

(அ)இவ் இறைவாக்கினரை முன்னறிவித்தவர் யார்?

(ஆ) யாரைக் குறித்து குறிப்பிடப்படுகிறது?

*(2)* யூதர்களின் தொழுகைக்கூடங்கள் ஆற்றிய பணிகள் இரண்டு தருக?

*(3)* இயேசு பன்னிரு சீடரை பணிக்கு அனுப்பியபோது கொடுக்கப்பட்ட பொறுப்புக்கள் இரண்டு தருக?

*(4)* இயேசுவிற்கு சதுசேயரினால் ஏற்படுத்தப்பட்ட சவால்கள் இரண்டு தருக?

*(5)* இறையரசின் பிரஜாவுரிமையை பெற்றுக்கொள்ளும் போது எதிர்கொள்ளும் சவால்கள் இரண்டு தருக?

*(6)* இறைவன் ஆபிரகாமிற்கு கொடுத்த வாக்குறுதிகள் எவை?

*(7)* இயேசு கூறிய அன்பின் கட்டளைகள் இரண்டினையும் குறிப்பிடுக?

*(8)* பெந்தகோஸ்து நாளில் சீடர்கள் மீதுதூய ஆவியாரின் வருகையின் போது நிகழ்ந்த விசேட அடையாளங்கள் இரண்டை குறிப்பிடுக?

*(9)*(அ) உரோமை பயணத்தின் போது பவுலுக்கு பாம்பு தீண்டிய தீவு எது?

(ஆ)அத்தீவில் பவுல் செய்த அற்புதம் என்ன?

*(10)*கறுப்பின மக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த இருவரை எழுதுக?

*2.* "நான் காபிரியேல், கடவுளின் திருமுன் நிற்பவன், உம்மோடு பேசவும் இந்த நற்செய்தியை உமக்கு அறிவிக்கவும் அனுப்பப்பட்டேன்"

*(1)*மேற்படி நற்செய்தி அறிவிக்கப்பட்ட இருவரை தருக?

*(2)*இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தினால் நிராகரிக்கப்பட்ட மூன்று பிரிவினரை தருக?

*(3)*இன்றைய சமூகத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு நீர்முன்னெடுக்கும் நடவடிக்கைகள் ஐந்தினை முன்வைக்குக?

3. "சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து செபியுங்கள்"

(1)இயேசுவின்தோற்ற மாறுதல் சம்பவத்தில் உடன் இருந்த சீடர்கள் இருவரின் பெயர்களை எழுதுக?

(2)இயேசு தனது பணியின் போது செபிக்க தெரிவு செய்த இடங்கள் மூன்றினை தருக?

(3)இயேசு செபத்தினூடாக தனது பணியை நிறைவேற்றினார் அதேபோன்று கிறிஸ்தவ பிள்ளையாகிய நீர் எக்காரியங்களை முன்னுரிமைப்படுத்தி செபிப்பீர் என்பதை ஐந்து விடயங்களை முன்வைத்து விளக்குக?

4. "நான் மற்ற ஊர்களிலும் இறையாட்சியைபற்றி நற்செய்தி அறிவிக்க வேண்டும், இதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்"

(1)இயேசு இறையரசை பரப்புவதற்கு கையாண்ட வழிமுறைகள் இரண்டு தருக?

(2)இறையரசின் கொள்கைகள் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் உவமைகள் மூன்று தருக?

(3)வழிதவறி செல்லும் நண்பருக்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் ஐந்தினை தருக?

5.தைரியத்துடனான பணி

(1)பவுலின் இரண்டாம்மறைத்தூதுப்பயணத்தின் போது அவருடன் சென்ற உடன் பணியாளர் இருவரின் பெயர்களை தருக?

(2)இரண்டாம்மறைத்தூதுப்பயணத்தின் போது பின்வரும் நகரங்களில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் ஒவ்வொன்றை குறிப்பிடுக?

(அ).பிலிப்பி (ஆ).எதென்ஸ் (இ)கொரிந்து

(3)பவுலின் இரண்டாம்மறைத்தூதுப்பயணத்தின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகளை கிறிஸ்தவப்பணியாளர் எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதை ஐந்து விடயங்களை முன்வைத்து விளக்குக?

6. "நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர்"

(1)ஆதித்திருச்சபையில் திருத்தொண்டர் தெரிவிற்கான காரணமாய் அமையும் விடயத்தினை தருக?

(2)திருத்தொண்டர் மூவரின் பெயர்களை தருக?

(3)ஆதித்திருச்சபையில் காணப்பட்ட எடுத்துக்காட்டான வாழ்வினை இன்று உமது திருச்சபையினால் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பதனை ஐந்து எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக?

**7.** பின்வரும் தலைப்பக்களில் எவையேனும் இரண்டினை தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக?

(1) பாஸ்கா

-பாஸ்கா அறிமுகம்
-பழைய பாஸ்காவின் உணவு
-புதிய பாஸ்காவை ஏற்ப்படுத்தியவர்
-புதிய பாஸ்கா உணவு
-புதிய உடன்படிக்கையின் விளைவு

(2) மன்னிப்பு

-இயேசு இவ்வுலகிற்கு வந்ததின் நோக்கம்
-இயேசு மன்னித்த சந்தர்ப்பங்கள்
-மன்னிப்பு தொடர்பாக கூறிய உவமை
-மன்னிப்பு தொடர்பான அறிவுரை
-மன்னிப்பின் மூலம் கிடைப்பவை

(3) விதைப்பவன் உவமை

-வழியோரம் விழுந்த விதைகள்
-பாறையில் விழுந்த விதைகள்
-முட்செடியில் விழுந்த விதைகள்
-நல்லநிலத்தில் விழுந்த விதைகள்
-உவமை மூலம் வெளிப்படும் செய்தி

(4) பிறரை உபசரித்தல்

-யூத சமூகத்தில் உபசரணைப்பண்பு
-இயேசுவின் உபசரித்தல் பற்றிய அறிவுரை
-இயேசு கூறியதன்படி செயற்படுவதன்மூலம் வெளிப்படும் குணஇயல்பு
-விருந்திற்கு அழைப்பு பெறுபவர்கள்
-இறையரசின் எதிர்பார்ப்பு